Periodicals Division Library 1989-6-23

விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர்: 31 | ஆனி 9 | துல்ஹஜ்தா 18 | இதழ் 35
யாழ்ப்பாணம் | வெள்ளிக்கிழமை | 23-06-1989

## அமைதிப்படை இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனு வைத்திய சாலை இரத்த வங்கிக்கு இந்திய அமைதிப் படையினர் நேற்று இரத்ததானம் செய்தனர்.

அமைதிப்படை உயர் அதிகாரி பிரிகேடியர் என். எஸ். கில் தலைமையில் அதிகாரிகள், ஜவான்கள் உட்பட சுமார் முப்பது பேர் வரையில்

(8-ம் பக்கம் பார்க்க)

## தென்பகுதி நிலைமை மேலும் மோசமடைகிறது

(கொழும்பு)

தென்பகுதி நிலைமைகள் நேற்று மேலும் மோசமடைந்தன.

கொழும்பு உட்பட நாட்டின் தென்பகுதியில் போக்குவரத்து நிலைமைகள் நேற்றைய தினமும் சீரடையவில்லை.

பாடசாலைகளில் மாணவர்களின் வரவு குறைந்திருந்தது. அலுவலகங்களுக்கு பெரும்பாலான ஊழியர்கள் வராத காரணத்தால் அலுவலகங்கள் கடைகள் யாவும் நண்பக

(8-ம் பக்கம் பார்க்க]

## இந்திய அமைதிப்படை விவகாரம்:

# இலங்கை கோரிக்கைக்கு இந்தியா உடன்பாடு?

## வவுனியா சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வவுனியா பகுதியில் இடம்பெற்ற இரண்டு முற்றுகை சம்பவங்களில் 25 பேர் கொல்லப்பட்டதாகவும் 10 பேர் காயமடைந்துள்ளதாகவும் அமைதிப்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

கொல்லப்பட்டவர்களில் 19 பேரின் சடலங்களையும் ஆயுதங்களையும் தாம் மீட்டுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## "முதலில் தமிழர் பாதுகாப்பு; பின்னரே வெளியேற்றம்"

(புதுடில்லி)

**இந்திய அமைதிப்படையை வாபஸ் பெறுமாறு இலங்கை தொடர்ந்தும் வற்புறுத்தி வருமானல், இதற்கு உடன்படுவதைத் தவிர இந்தியாவினல் வேறு எதுவும் செய்யமுடியாது என்று இந்திய அரசுகருதுவதையே பிரதமர் திரு. ராஜீவ்காந்தியும் முடிவாக நினைப்பதாக பி. பி. ஸி. நேற்று முன்தினமிரவு தெரிவித்தது.**

இலங்கை ஜனாதிபதிக்கு இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அனுப்பிவைத்துள்ள கடிதம் தொடர்பாகக் குறிப்பிடுகையிலேயே பி.பி.ஸி. இவ்வாறு தெரிவித்தது.

எனினும், இலங்கை அரசு தற்பொழுது கொடுத்திருக்கும் காலக் கெடுவுக்குள் மேலும் பேச்சுக்கள் நடாத்தப்படாதுஎன்றும், தமிழர்களின் பாதுகாப்பிற்கு உறுதி வழங்கப்படாது இந்தியப் படை வெளியேருது என்றும் புதுடில்லி வட்டாரங்கள் கருதுகிறது என்றும் பி.பி.ஸி. குறிப்பிட்டுள்ளது.

[8ம் பக்கம் பார்க்க]

## கிளிநொச்சியில் மோதல் ஒருவர் பலி, மற்றெருவர் படுகாயம்!

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியில் பாரதிபுரம் என்னுமிடத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவமொன்றில் ஒருவர் பலியானுர். மற்றெருவர் படுகாயங்களுக்குள்ளாகி யாழ். வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுப்பகல் நடந்த இத்

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ். செயலக செயற்பாடு: இணைப்பாளர் விளக்கம்

[யாழ்ப்பாணம்]

யாழ் அரசாங்க செயலகம் செயற்படுவது தொடர்பாக வடக்கு கிழக்கு மாகாண சபையின் யாழ்- மாவட்ட அரசியல் இணைப்பாளர் திரு. ஆ. முருகநேசன் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கை வருமாறு–

(7-ம் பக்கம் பார்க்க)

## இலங்கை கோரிக்கை: அ. தி. மு. க. கண்டனம்!

(சென்னை)

''இந்தியப்படை வெளியேற வேண்டும் என்ற இலங்கை ஜனாதிபதியின் கோரிக்கை தன்னிச்சையானது. எனவே அமைதிப்படை இலங்கையிலிருந்து வெளியேறக் கூடாது''.

இவ்வாறு அண்ணு திராவிட முன்னேற்றக்கழகத்தின்

(8-ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி கோரிக்கையை பரிசீலிக்க வேண்டும் -காமினி

(கொழும்பு)

''இந்திய அமைதிப் படையைத் திருப்பி அழைக்குமாறு ஜனாதிபதி விடுத்துள்ள கோரிக்கையை மீண்டும் பரிசீலிப்பது நல்லது'' என்று அமைச்சர் காமினி திஸநாயக்கா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் அவசரகாலச் சட்ட அமுல் தொடர்பான விவாதத்தில் பேசுகையிலேயே அமைச்சர் இந்த வேண்டு

(8ம் பக்கம் பார்க்க)

## 'ஈரோஸ்' அலுவலகம் சுற்றிவளைப்பு

### ஒருவர் கடத்தப்பட்டார்

(மட்டக்களப்பு)

'ஈரோஸ்' அமைப்பின் செங்கலடி அலுவலகம் நேற்று முன்தினம் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மட்டக்களப்பில் இந்த அமைப்பின் உறுப்பினர் ஒருவர் இனந்தெரியாதவர்களினல் கடத்தப்பட்டுள்ளார்.

**தெல்லிப்பழையிலும்**

இது இவ்வாறிருக்க தெல்லிப்பழையில் நேற்றுக்காலை கைது செய்யப்பட்ட இரு 'ஈரோஸ்' உறுப்பினர்கள் நேற்றுமாலை விடுதலை செய்யப்பட்டார்கள்.

## போக்குவரத்துசபை ஊழியர் வேலைக்கு திரும்ப காலக்கெடு

(கொழும்பு)

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுவரும் போக்குவரத்துச் சபை ஊழியர்கள் வேலைக்குத் திரும்புவதற்கு போக்குவரத்து சபை காலக்கெடு விதித்துள்ளது.

எதிர்வரும் 26ம் திகதி திங்கட்கிழமை அல்லது அதற்கு முன்னர் சகல ஊழியர்களும வேலைக்குத் திரும்பவேண்டும் அவ்வாறு வேலைக்குவரத் தவறுவோர் பதவியிலிருந்து விலகியதாகக் கருதப்படுவர் என போக்குவரத்து அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வேலைக்குத் திரும்பும் சகல போக்குவரத்துச்சபை ஊழி

(8ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு - யாழ். ரயில் சேவை

(யாழ்ப்பாணம்)

கொழும்பு-வவுனியா ரயில் சேவை நேற்று நடைபெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இன்று கொழும்பு-யாழ்ப்பாணம் ரயில் சேவை நடைபெறுமா என்பதும் சந்தேகமாகவிருப்பதாக ரயில்வே திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேநேரத்தில் எரிபொருள்களுக்குத் தட்டுப்பாடு என்ற வதந்தியைப் பரப்பி, கூடுதலான விலையில் யாழ்ப்பாணத்தில் எரிபொருள் விற்கப்படுகிறது.

நான்கு நாட்களுக்குப் போதுமான எரிபொருள் குடாநாட்டில் இருப்பதாகவும் இன்று ரயில் வந்தால், போதியளவு எரிபொருள் யாழ்ப்பாணத்திற்குக் கிடைக்கும் என்றும் சம்பந்தப்பட்டவர்கள் தெரிவிக்கிருர்கள்.

**யாழ்.நகரில்**

யாழ். நகரில் நேற்று [illegible] ரேல் லீற்றர் 20 ரூபா [illegible]

(8-ம் பக்கம் பார்க்க)

## மண்கும்பான் வர்த்தகர் மர்மக்கொலை!

(யாழ்ப்பாணம்)

மண்கும்பானில் வர்த்தகர் ஒருவரின் சடலம் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் புகை குழியொன்றிலிருந்து நேற்றுக் காலை மீட்கப்பட்டது.

மண்கும்பானைச் சேர்ந்த பிரபல வர்த்தகரும், சமூகசேவை

(8-ம் பக்கம் பார்க்க)

## பாடசாலை மாணவர் போராட்டம்: பல்கலைக்கழக மாணவர் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களின் பகிஷ்கரிப்புப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் நேற்றுமுழு நாளும் தமது விரிவுரைகளைப் பகிஷ்கரித்தார்கள்.

இப்பகிஷ்கரிப்பு இன்றும் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

## "விபரங்கள் இரகசியம்!"

(புதுடில்லி)

''இலங்கை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்ட விபரங்களை வெளியிட முடியாது''.

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கைதடிச் சந்தியில் வீடு கட்டக்கூடிய 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுடன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல. சி–2991 மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம். [சி 2991

நல்ல இன 1½ மாத அல்ஷேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 15/2, ஒடைலேன், வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (சி 2998]

வைத்தியர்களினால் சிபார்சு செய்யப்பட்ட நீரழிவு வியாதிகளுக்கு உகந்த வறுத்த கோதுமை அரிசிக் குறுணல், வறுத்த கோதுமை, றவை, கோதுமை அரிசியில் அரைத்த ஆட்டாமா எங்களிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். M. G. M. 777, K. K. S. Rd. & 208, 1st Cross St. Jaffna. சி-2929

பருத்தித்துறை வீதியில் நர்சிங்ஹோம் முன்னால் அமைந்துள்ள 2½ பரப்பு காணியும், பலாலி வீதியில், திருநெல்வேலிசந்திக்கு அண்மையில் அமைந்துள்ள 1½ பரப்பு காணியும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: கு. சிவகுமார், 352, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-2994)

### மணப்பந்தல்

சைவ வேளாளகுல அழகிய 30வயது அக்கவுண்டன் மணப்பெண்ணுக்கு படித்த உயர் பதவி வகிக்கும் மணமகன் தேவை. சீதனம் கொடுக்கப்படும். சாதகக்குறிப்பு மற்றும் விபரங்களுடன் உடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. சி- 2819 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். [சி 2819]

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## வடமராட்சி கிழக்கில் 25, 000 பேருக்கு உணவு முத்திரை வழங்க நடவடிக்கை

(பருத்தித்துறை)
வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உணவு முத்திரைகளைப் பெறத் தகுதியுள்ள 25,000 பேருக்கு உணவு முத்திரைகளை வழங்குவதற்கான துரித நடவடிக்கைகளை வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. தா. சந்திரசேகரம் மேற்கொண்டுள்ளார்,

பெரும்பாலானவர்களுக்கு உணவு முத்திரைகள் வழங்கப்பட்டுவிட்டதாகவும், இப்பகுதியில் உணவுமுத்திரைகள் பெறத் தகுதியுடையவர்கள் உணவு முத்திரைகளைப் பெறத் தவறியிருப்பின் தன்னுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறும் உதவி அரசாங்க அதிபர் திரு. சந்திரசேகரம் அறிவித்துள்ளார்.

## 15 கூட்டுறவுச்சங்க லொறிகள் 450 தொன் மாவை எடுத்துவர திருமலைக்கு விரைந்துள்ளன!

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்துக்கு 450 தொன் நிறை 'மா'வை எடுத்து வர பல லொறிகள் திருகோணமலை விரைந்துள்ளன.

இதேசமயம் இவ்வார இறுதியுள் 470 தொன் 'மா'வு ரயில் மூலம் யாழ்ப்பாணம் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பதினைந்து, பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் திருகோணமலைக்குச் சென்று லொறிகளில் மா எடுத்து வர சம்மதம் தெரிவித்திருந்தன.

இந்த ப. நோ. கூ. சங்கங்களுக்கு நேற்று யாழ். செயலகத்தில் வைத்து மா கொண்டு வருவதற்கான உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

## இடம்பெயர்ந்தோரின் வீடுகளில் யன்னல் கதவுகள் திருட்டு

(வடமராட்சி)
பொலிகண்டியில் குறிப்பிட்ட சில இடங்களைச் சேர்ந்த வீடுகளிலுள்ள பெறுமதிமிக்க கதவுகள், யன்னல்கள் மாயமாய் மறைந்து வருகின்றன.

குடியிருப்பாளர்கள் இல்லாத வீடுகளிலிருந்தே இவை அகற்றப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

பொலிகண்டியில் ஏற்பட்ட அச்சம் காரணமாக குறிப்பிட்ட பகுதிகளிலுள்ள மக்கள் தமது வீடுகளைக் கைவிட்டு வேறு இடங்களில் குடிபெயர்ந்துள்ளனர்.

அவர்களின் வீடுகளிலுள்ள தேக்கு, முதிரை போன்ற விலைமதிப்புள்ள மரங்களிலான கதவு, யன்னல்கள் மாயமாய் மறைந்து வருகின்றனவாம்.

சம்பந்தப்பட்ட வீட்டு உரிமையாளர்கள் இது குறித்து முறைப்பாடு செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

### தேவை

தொழிற்சாலை அமைக்கக் கூடிய ஆகக்குறைந்தது 1000 சதுர அடி பரப்பளவுள்ள கட்டிடம் தேவை. அ. ஜெரூட், டாக்டர் சுப்பிர்மணியம் வீதி, சுன்னுகம். [சி. 2999]

## பொதுக்கூட்டம்

[வவுனியா]
நாட்டின் நிலைமை, எதிர்காலத் திட்டம் போன்றவை தொடர்பாக விளக்கமளிக்கும் பொதுக்கூட்டம் ஒன்று இம்மாதம் 27-ம் திகதி வவுனியாவில் நடைபெறவிருக்கிறது.

இக் கூட்டத்தில் ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியின் செயலாளர் திரு ஜி. ஞானசேகரன், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிச் செயலாளர் நாயகம் திரு. பத்மநாபா, தமிழீழ விடுதலை இயக்க செயலதிபர் திரு. ஏ. செல்வம் ஆகியோர் உரை நிகழ்த்துவர்.

## ஆட்டோ ரிக்ஷாக்களை இராணுவம் விரட்டியது!

[கொழும்பு]
கொழும்பு காலிமுகத்திடலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சுமார் அறுநூறு ஆட்டோ ரிக்ஷாக்களை இராணுவத்தினர் விரட்டினர்.

நேற்றுமுன் தினம்காலிமுகத்திடலில் பெருந்தொகையான ஆட்டோ ரிக்ஷாக்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

அந்த இடத்துக்கு விரைந்த இராணுவத்தினர் அங்கிருந்த அறுநூறுக்கும் மேற்பட்ட ஆட்டோ ரிக்ஷாக்களையும் உடனடியாக அங்கிருந்து அப்புறப்படுத்துமாறு உத்தரவிட்டனர்.

ஆட்டோ ரிக்ஷாக்களை ஓடக்கூடாது என்று தமக்கு அச்சுறுத்தல் கடிதங்கள் வந்திருப்பதாக அந்தச்சாரதிகள் அப்போது இராணுவத்தினரிடம் தெரிவித்தனர்.

எனினும் இராணுவ உத்தரவை அடுத்து அந்தஆட்டோ ரிக்ஷாக்கள் அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டன.

ஆட்டோ ரிக்ஷாக்கள் சேவையில் ஈடுபடுகின்றனவா என்பதை அவதானிக்க கொழும்பில் பல பகுதிகளிலும் இளைஞர்கள் பலர் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

இதன் காரணமாக மிகச் சில ஆட்டோ ரிக்ஷாக்களே ஓடியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## 'எழுத்துச் சீர்திருத்தம்' நாளை கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]
'எழுத்துச் சீர்திருத்தம்' பற்றிய கருத்தரங்கு நாளை சனிக்கிழமை மாலை 3மணிக்கு யாழ். திருமறை கலாமன்ற ஆய்வரங்கில் [கத்தோலிக்க அச்சகவளாகம்] பேராசிரியர் அருட்திரு நீ. ம. சவரி தலைமையில் நடைபெறவுள்ளது.

கலாநிதி எம். ஏ. நுஃமான், கலாநிதி ஈ. பாலசுந்தரம், ஆசிரியை திருமதி ராணி சின்னத்தம்பி, புலவர் ஈழத்துச் சிவானந்தன் ஆகியோர் சிறப்புரையாளர்களாகக் கலந்து கொண்டு உரையாற்றுவர்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1989-07-17 வரை விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

1. கணிதத்திலும் புள்ளி விபரவியலிலும் உதவி விரிவுரையாளர்/ சிரேட்டவிரிவுரையாளர் தரம் II / சிரேட்ட விரிவுரையாளர் தரம் I.
2: பொருளியல் சிரேட்ட விரிவுரையாளர் தரம் II (சமூகவியல்)
3. அரபு மொழியிலும் இஸ்லாமிய நாகரிகத்திலும் உதவி விரிவுரையாளர்/ சிரேட்டவிரிவுரையாளர் தரம் II.

**சம்பள அளவுத்திட்டம்:**

1. உதவி விரிவுரையாளர்: ரூபா 3900/–(நிலையான) மாதமொன்றுக்கு, ஓராண்டு காலத்திற்கு.
2. சிரேட்டவிரிவுரையாளர் தரம் II: ரூபா 8000-5 x 250 - 9250/- மாதமொன்றுக்கு.
3. சிரேட்டவிரிவுரையாளர் தரம் I: ரூபா 9600-8 x 250 - 11600/– மாதமொன்றுக்கு.

ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் ரூ. 20/– செலுத்தி இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய படிவங்களில் விண்ணப்பம் செய்தல் வேண்டும். படிவங்களையும் ஏனைய விபரங்களையும் தபால் மூலம் பெற விரும்புவோர் 23x10 ச. மீ. அளவுடைய சுய முகவரியிட்டு முத்திரையொட்டப்பட்ட கடித உறையுடன் ரூபா 20/- பெறுமதியான காசுக்கட்டளை / தபாற்கட்டளையை அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் என்பனவற்றிலிருந்து அனுப்பப்படும் விண்ணப்பங்கள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

தெரிவுசெய்யப்படும் அபேட்சகரின் சிறப்பான தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தின் பொருத்தமான படியில் அவர் வைக்கப்படுவார்.

**பதில் பதிவாளர்.**

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
இலங்கை,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(ஏ 302)

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

### வடிகால் துப்பரவுசெய்யும் வேலைகளுக்கான

## கேள்வி அறிவித்தல்

பின்வரும் வடிகால் துப்பரவுசெய்யும் வேலைகளுக்கான அரக்குமுத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 1989-ம் ஆண்டு ஆடி மாதம் 7-ம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

### அட்டவணை

| இல. | வேலை விபரம் | கேள்விப் பிணைப்பணம் மீளளிக்கப்படக் கூடியது | கேள்விப் படிவக்கட்டணம் (மீளளிக்கப்பட முடியாதது) | ஒப்பந்தகாரர் பதிவுத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | கன்னதிட்டிக் குளத்திலிருந்து புல்லுக்குளம் வரை | 500/- | 100/– | 100,000/– |
| 2. | பரவைக் குளத்திலிருந்து ஆரியகுளம் – புல்லுக்குளம்- கடல்வரை | 500/- | 100/- | 100,000/– |
| 3, | மருதடி வீதி -பிள்ளையார் குளம்- கோவில் வீதி - தேவரீரி குளம்- கடல்வரை | 500/– | 100/- | 100-000/- |
| 4, | இராசாவின் தோட்டம் வீதியிலிருந்து ஆரியகுளம் வரை | 500/- | 100/- | 10C-000/- |
| 5, | கச்சேரி நல்லூர் வீதி, நாயன்மார்குளம்: ஸ்ரான்லி கல்லூரியிலிருந்து மூர்த்த விநாயகர் வீதி, நாயன்மார்குளம், ஆனந்தன் வடலிவீதி வரை | 500/- | 100/- | 100–000/- |

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து 1989-ம் ஆண்டு ஆடி மாதம் 5–ம் திகதி புதன்கிழமை பகல் 12-00 மணிவரை மேலேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு கேள்விக்கும் எதிராகவுள்ள கேள்விப் பிணைப்பணம், கேள்விப் படிவக் கட்டணம் ஆகியவற்றைச் செலுத்துவதன்பேரில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களின் இணைப் பிரதிகளில் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மாநகராட்சிமன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்,

(ஏ-301)

## சைவ சித்தாந்த ஆய்வுவட்டம் ஆரம்பவிழா

காலம்: 25 - 6 - 89 ஞாயிறு
நேரம்: பி, ப. 3-00 மணி
இடம்: திருமறைக் கலாமன்ற ஆய்வரங்கு, 358 பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

ஆர்வலர்கள் அன்புடன் அழைக்கப்படுகின்றார்கள்.

கௌரவ செயலாளர்.
திருமறைக் கலாமன்றம்
223, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
[சி 2996]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

அறிவது பிரதானமல்ல; கற்பனைதான் பிரதானமானது.

— அனடோல் ப்ரான்ஸ்.

## நமது நோக்கு

# பாவம், மார்க்கோஸ்!

தூர கிழக்குப் பிரதேசத்திலே கேந்திர ஸ்தானத்தில் இருப்பது பிலிப்பைன்ஸ். அமெரிக்காவுக்கு அங்கு முக்கிய தளம் இருக்கின்றது. எனவே அதன் செல்லப்பிள்ளைதான் பிலிப்பைன்ஸ் நாடு. அதன் ஜனாதிபதி மார்க்கோஸ்; முடிசூடா மன்னன். அவர் மனைவி இமெல்டாவோ அரசியலிலே மிகுந்த செல்வாக்குள்ளவர். உதவியாக வந்த பணம் ஊதாரித்தனமாகச் செலவாகின்றது. மக்கள் எதிர்ப்புக்குத் தலைமைதாங்குகின்றார் அக்கியுனோ.

இரும்புக் கரங்களால் எதிர்க்கட்சியை நசுக்க, நாட்டைவிட்டே ஓடினார் அக்கியுனோ. பல மாதங்களாக ஆர்ப்பாட்டங்கள் வலுத்தன. மீண்டும் நாடு திரும்ப அக்கியுனோ அனுமதிக்கப்படுகின்றார். அவரை வரவேற்க விமான நிலையத்தில் மக்கள் கூட்டம். வந்திறங்கியபோதே தாக்கப்பட்டு மரணமானார். இது பழைய நினைவலைகள்.

1986 பெப்பிரவரியில் அக்கியுனோவின் மனைவி குரேசன் தலைமையில் மக்கள்கிளர்ச்சி வலுத்தது. பதவியைத் துறந்து ஹொனலூலுவுக்குப் பறந்துவிட்டார், மனைவியுடன். மார்க்கோசை வளர்த்துவிட்ட அமெரிக்காவே, குரேசன் அக்கியுனோவை ஆதரித்து ஆட்கிபீடமேற்றியது அமெரிக்க இராசதந்திரத்திற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

இவ்வாண்டு ஜனவரி முதல் மார்க்கோஸ் மருத்துவமனையில் உள்ளார். அவரின் நிரந்தர வியாதி 'புரென்கைல் ஆஸ்த்துமா' ஆனால் அவர் உடல் பல சத்திரசிகிச்சைகளைக்கண்டு விட்டது, சென்றமே மாதத்தில் வாரத்தில் நான்கு நாட்கள் இரத்தச் சுத்திகரிப்பு இயந்திரங்களோடு தான் வாழ்க்கை.

அண்மையிற் குடற்புண்ணுக்குச் சத்திரசிகிச்சை அளிக்கப்பட்டது சிகிச்சை பூரண வெற்றியோ என்னவோ எமக்குத்தெரியாது. ஆனால் அவருக்குச் செயற்கைச் சுவாசம் அளிக்கப்பட்டு வருகின்றது.

அவரது சுவாசப்பை, சிறுநீரகம், இதயம், குடல் ஆகிய பல உறுப்புகள் பாதிக்கப்பட்டுள்ளன.

''தண்ணிய திருமேனி, சதைப்புண்டு, தவிப்பெய்தி பண்ணிய பல பாடு படும்போது...'' என்ற இரட்சணிய யாத்திரிகப் பாடல் வரிகளை அவர் நிலை நினைவுபடுத்தும்போது, அவர் பற்றிய வேறு செய்திகளும் எமக்கு வந்துள்ளன.

இவருக்கு எதிராக நியூயோர்க்கில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது. வழக்கு எதற்கு? பிலிப்பைன்ஸ் நாட்டின் 109 மில்லியன் சொத்தைக் கையாடியதாக வழக்கு. இதேபோல, இன்னோர் வழக்கு. 165 மில்லியன் டொலரை நியூயோர்க் வங்கிகளிற் சட்டவிரோதமாகக் கடன் வாங்கியதாகவும், அதனை அறவிடுவதற்கான வழக்கு அது.

மனைவி இமெல்டா மீதும் இத்தகைய வழக்கு வந்து, கைதுசெய்யப்பட்டு, பெருந்தொகைப் பணத்தின் பிணையில் வெளியே வந்துள்ளார். சட்டத்தரணிகள் மருத்துவமனைக்கு வந்து தொந்தரவு கொடுத்தபோது, ''சாகும் மனிதனைக் கொன்றுவிடாதீர்கள்'' என்று எரிந்து விழுந்திருக்கின்றார்.

இலங்கையின் பிரபல எழுத்தாளர் டி. பி. விஜயதுங்கா வெளிநாட்டில்ஓய்வு பெற்று வந்தார். இறுதி நாட்களைத் தாயகத்தில் கழிக்க விரும்பினார். விமான நிலையத்தில் இறங்கும் இடத்திற்கே சக்கர நாற்காலி சென்றது. வந்திறங்கியதும் மண்ணை முத்தமிட்டு மகிழ்ந்திருக்கிறார். ஜனாதிபதியின் விசேட பணிப்பில் அரசவீடொன்று அவருக்கு ஒதுக்கப்பட்டது. சில நாட்களிலே மன நிறைவோடு- இறுதி ஆசை நிறைவேறிய தோடு- மறைந்துவிட்டார்.

மார்க்கோஸுக்கும் இத்தகைய ஆசை. மீண்டும் பிலிப்பைன்ஸ் சென்றுவிட வேண்டும் என்று ஆசைப் பட்டார். ஆனால் குரேசன் அக்கியுனோ கொடுத்த பதில் என்ன? ''உங்கள் உடல் நலத்திற்காகப் பிரார்த்திக்கிறேன்! ஆனால் நீங்கள் மீண்டும் வந்து இங்கு மரணிப்பதால் நாட்டிலே தேவையற்ற பிரச்னை உருவாகும். எனவே மனவருத்தத்துடன் அனுமதி மறுக்கப்படுகின்றது!''

பாவம், மார்க்கோஸ் அறுவடை செய்கிறார்!

# சாரதாதேவி புலமைப்பரிசில்

(வடமராட்சி)

அன்னை சாரதாதேவி புலமைப் பரிசில் இம்முறை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மாணவிக்குக் கிடைத்துள்ளது.

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவா ஆசிரமம் வருடாந்தம் வழங்கி வரும் புலமைப் பரிசில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியைச் சேர்ந்த செல்வி ப. பத்மேஸ்வரிக்கு கிடைத்துள்ளது.

அத்துடன் பின்தங்கிய இருபத்தைந்து மாணவர்களுக்கும் இந்த ஆசிரமம் கல்வி உபகரணங்களை வழங்கியுள்ளது.

# நாரந்தனை இராயப்பர் ஆலய நவநாள்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை, நாரந்தனை புனித இராயப்பர், சின்னப்பர் ஆலய நவநாள் கடந்த 20-ம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

தினமும் மாலையில் நவநாள் ஆராதனைகள் நடைபெறுகின்றன. இம்மாதம் 29ந் திகதி திருநாட்பலி ஒப்புக்கொடுக்கப்படும். நவநாளுக்கான ஏற்பாடுகளை நாரந்தனை பங்குத் தந்தை அருட்திரு. [illegible] சன் அடிகளார் செய்துள்ளார்.

# "அமைதிப்படை விவகாரம் ஐ. நா. செல்லுமானால் சர்வதேச ரீதியில் ராஜீவுக்கு பெரும் சிக்கல் ஏற்படும்!"

## மேற்கத்திய ராஜதந்திரிகள் கருத்து

(லண்டன்)

இந்திய அமைதிப்படை விவகாரம் தொடர்பாக இலங்கை அரசு ஐ. நா. பந்தோபஸ்து சபைக்கும் சர்வதேச நீதிமன்றத்திற்கும் தெரியப் படுத்தும் சந்தர்ப்பத்தில் அது பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கு சர்வதேச ரீதியில் பெரும் சிக்கலை ஏற்படுத்துமென மேற்கத்திய ராஜதந்திரிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இந்த விவகாரத்தை திரு. ராஜீவ் காந்தி விரைவாகவும், திறமையாகவும் கையாளத் தவறும் பட்சத்தில் அமைதிப் படைக்கு எதிரான கருத்து சர்வதேச அரங்கில் பரவும் சந்தர்ப்பம் ஏற்படும் என்றும் ஓர் இராஜ தந்திரி தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் குறித்து தமக்கு எந்தவித செய்தியையும் இலங்கை அரசு அனுப்பவில்லையென்று தெரிவித்துள்ள பிரதமர் காந்தி தாம் இது தொடர்பாக பத்திரிகைகள் மூலமே அறிந்துகொண்டதாகவும் தெரிவித்தார். இது பற்றி எந்தவித கருத்தையும் வெளியிட மறுத்துள்ள பிரதமர் காந்தி, தாம் கருத்து வெளியிடமுன் இலங்கையின் நோக்கங்களை உத்தியோக பூர்வமாக அறிய விரும்புவதாகவும் கூறினார்.

ஐ. நா. பந்தோபஸ்து சபைக்கும் ஹேக்கிலுள்ள சர்வதேச நீதிமன்றத்திற்கும் அமைதிப்படை விவகாரம் சென்றாலும் எமது நிலைபாட்டில் மாற்றமெதுவும் ஏற்படாதென்றும் பிரதமர் காந்தி வெளிநாட்டு செய்தி ஸ்தாபனமொன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

# விஞ்ஞான மாணவர் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

முதலாம் வருட பரீட்சையில் சித்திபெறத் தவறியமைக்காக அந்த மாணவர்களைத் தொடர்ந்தும் முதலாம் வருடத்திலேயே இருந்து கற்க வேண்டுமென்ற நிபந்தனையை வாபஸ் பெற்றுக் கொள்ளுமாறு கோரி, யாழ். பல்கலைக் கழக விஞ்ஞானபீட மாணவர்கள் நேற்றுமுன்தினம் விரிவுரைகளைப் பகிஷ்கரித்தனர்.

ஆய்வு கூட செய்முறைப் பாடங்களையும் இவர்கள் பகிஷ்கரித்தனர்.

இப்பகிஷ்கரிப்பு போராட்டம் தொடர்ந்து நடைபெறும் என விஞ்ஞான பீட மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

# "மிருதங்கக் கலையை திறமையாகப் பயின்றுள்ளார் கண்ணதாசன்"

## அரங்கேற்றத்தில் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

''கண்ணதாசன் எமது பாரம்பரிய கலைகளில் ஒன்றான மிருதங்கக் கலையை மிக்க திறமையாகப் பயின்றுள்ளார். இன்று இந்தக் கன்னி முயற்சிக்குப் பெரிய பெரிய வித்வான்கள் முன்னிலையில் அங்கீகாரம் கிடைத்துள்ளது.''

அண்மையில் நல்லூர் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில் நடைபெற்ற செல்வன் கணேசசுந்தரன் கண்ணதாசனின் மிருதங்க அரங்கேற்ற விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

இன்றைய விழா இனிவரும் கச்சேரிகளுக்கு ஒரு முன்மாதிரியாக அமையவேண்டும். இத்

(7-ம் பக்கம் பார்க்க)

# சித்த மருத்துவத்தை நசுக்க முயற்சியா?

'ஆயுர்வேத நிலையங்களிலும் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு' என்னும் தலைப்புடன் கடந்த 17-ம் திகதி சனிக்கிழமை ''ஈழநாடு'' தினத்தாளில் வெளிவந்த செய்தி முக்கிய இடம் பெறவேண்டியதே. நம்பிரதேச அபிவிருத்தியில் தொன்மையானதும், தமிழ்க் கலைகளில் இடம் பிடித்துக்கொண்டதுமான ''சித்த மருத்துவத்தின் அவல நிலை' அக்கறையுள்ளவர்களுக்குக் கவலை தருகின்றது.

## மக்கள் கருத்து

மாநகர சபை, நகர சபை, மற்றும் பிரதேச சபைகளின் நேரடிக் கண்காணிப்பில் ''இலவச மருத்துவ நிலையங்கள்' நிர்வகிக்கப்பட்டாலும், மருத்துவர்கள் உதவியாளர்களைத் தேர்ந்து நியமிப்பது, தேவையான மருந்துகளைக் கொடுப்பதுபோன்றவற்றைகொழும்பு ஆயுர்வேத கவுன்சில் நிர்வாகமே மேற்கொண்டுவருகிறது. இன்று சிங்கள மொழியிலேயே சகல தொடர்புகளும் நடைபெற்று வருகின்றன. சிங்கள மொழி தெரியாத எவரும் ஏதும்கோரிக்கைவிட முடியாது இந்நிலை தாமதமின்றித் திருத்தப்படவேண்டும், - தமிழ் மொழியில் ஆலோசனை தரவும், ஆலோசனைபெறவும் அறிவாளிகளைக் கொண்ட சபை வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்காக நிறுவப்படவேண்டும்.

சுமார் 50 இலவச மருத்துவசாலைகள்இப்பகுதியில்பெயரளவில் நிறுவப்பட்டிருக்கின்றன. இவற்றை [illegible] நடைமுறைப்படுத்தும் பணி இச் சபையிடம் ஒப்படைக்கப்படவேண்டும்.

தேவைப்படும் மருந்துகளுக்குரிய உதவிப்பணம்கூட காலாகாலத்தில் கையளிப்பதில்லை. அவ்வவ் வருடச் செலவுகளை வருட முடிவில் கொடுப்பது வழக்கம். தேவையான மருந்துகள் கிடைக்காமல் நோயாளர் வேறு வைத்தியவசதிகளை நாடவேண்டியிருக்கிறது.

ஒரு நோயாளிக்கு மருத்துவரால் கொடுக்கப்படும் மருந்துகளின் பெறுமதி 10 ரூபாவுக்கு மேல் இருக்கக்கூடாது என்பது கட்டளை. ஆயுர்வேத கூட்டுத்தாபனம் கொழும்பில் இயங்குகிறது. சிங்கள மொழி அல்லாத வேறு எம்மொழியிலும் அங்கு தொடர்பு கொள்ள முடியாது. இங்கு முக்கிய சித்த மருந்துகள் தயாரித்துக் கொடுப்பதில்லை, இக்கூட்டுத்தாபனத்தில்தான் 75 வீத மருந்துகள் பெறவேண்டும். மீதி 25 வீத மருந்துகளை தெரியப்பட்ட மருந்துச்சாலைகளில் பெறலாம். இந்த 25 வீத மருந்துகளை மட்டும் வைத்துக் கொண்டு எத்தனை நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்யமுடியும்? தமிழ் சமூகத்தின் பாரம்பரியக் கலைகளில் ஒன்றான சித்த மருத்துவத்தை நசுக்கும் நடைமுறையாகவே இவை இருக்கின்றதேயன்றி வளர்ச்சிக்கு உதவவில்லை.

வடக்கு-கிழக்குப் பிரதேசத்துக்குத் தேவையான மருந்துகளை இங்கேயே தயாரித்து இம் மருந்துச் சாலைகளுக்குக் கொடுக்கும் திட்டமொன்றை இப்பகுதி திட்டமிடல் பணி அலுவலகம் தயாரித்து சமர்ப்பித்திருந்தது. இதனை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

வைத்திய சிரோமணி

**எம். எஸ். சுந்தரம்,**
(செயலாளர்,
வட இலங்கை
சித்த ஆயுர்வேத
மருத்துவர்கள்சம்மேளனம்)

## பலதும் பத்தும்

### ஆனைக்கும் ஆபத்தா?

ஆனைகள் பெருமளவிற் காணப்படும் கண்டம் ஆபிரிக்காக் கண்டம். ஆனைகள் தொகை அங்கு பெருமளவில் அருகி வருகின்றனவாம். 12 வருடங்களுக்கு முன் கெய்யா ஆனை வேட்டையைத் தடை செய்தது. இருப்பினும் 130,000 ஆக இருந்த தொகை இன்று அங்கு 20,000க்கு வந்துவிட்டது.

தான்சானியாவிலும் இதே கதைதான் அங்கும் ஆனைகளின் தொகை அரைவாசியாகிவிட்டது. தொகை குறைவதன் காரணம் என்ன? பெறும்திமிக்க தந்தத்திற்காகக் கொல்கிறார்களாம்!

தந்தங்கள் தூர கிழக்கு நாடுகளுக்குக் கடத்தப்படுகின்றன; நல்ல விலைக்கு விற்கப்படுகின்றன. குறிப்பாக, ஜப்பான் இந்தத் தந்தங்களை வாங்கி, செதுக்கி மீண்டும் ஏற்றுமதி செய்து நல்லபணம் சம்பாதிக்கிறது.

ஆனை இனத்தை அழியவிடாது காப்பாற்றவேண்டுமென்ற குரல் ஓங்கி ஒலிக்கிறது. தந்த விற்பனையைத் தடை செய்ய வேண்டுமென்று வேண்டுகோள் வலுத்து வருகின்றது குரல் எழுப்புபவர்கள் யார்? அழியும் ஆபத்துடைய உயிரினப் பொருள்கள் விற்பனைத் தடைக்கழகம் (Cites) என ஒரு சர்வதேச கழகம் உண்டு. இதில் 110 நாடுகள் ஒப்பமிட்டுள்ளன. அண்மையில் அமெரிக்காவும் இதிற் சேர்ந்துள்ளது.

எதிரொலி என்ன? ஆனைத் தந்த இறக்குமதியை ஜப்பானும் தடை செய்து விட்டது!

--வாணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுழுக்கு அருளப்பர் ஆலய 1

## சுண்டுக்குளி, 24-6-1989

# ஆலய வரலாறு

மக்கள் குடிகொள்ளும் இடங்களில் கோவில் ஒன்றும் அமைந்துவிடுவது தமிழர் மரபு. இறைவனை நோக்கி எழுகின்ற உள்ளங்களில் வழிபாட்டு செயற்பாடாய் பக்தி நிறை கரங்களால் உருப்பெற்று மனித உறவுகளின் உச்சமாகவும் தெய்வ உறவின் ஊற்றாகவும் அமைந்திருப்பவையே ஆலயங்கள்.

### புனிதர் வந்தார்

யாழ். சுண்டிக்குளியில் புனித ஸ்நாபக அருளப்பருக்கு ஆலயம் ஒன்று அமைந்துள்ளது. தொன்மையும் புதுமையும் நிறைந்த ஒரு நிகழ்வாகும். யாழ்ப்பாண கத்தோலிக்க ஆலயங்களைப் பற்றி 1634ல் எழுதப்பட்ட ஒரு வரலாற்று ஏடு சுண்டிக்குளி புனித ஸ்நாபக அருளப்பரின் ஆலயம் பற்றி குறிக்கப்பட்டு அது 2450 கிறிஸ்தவர்களைக் கொண்டதாய் அன்று திகழ்ந்ததெனக் கூறுகிறது. போர்த்துக்கேயர் காலத்தில் உருப்பெற்ற இப் புனிதரின் ஆலயம் தற்போதைய ஆலயம் இருக்கும் இடத்திற்கு தென் கிழக்கே 200 யார் தொலைவில் அமைத்திருந்ததென அறியக் கிடக்கிறது. ஒல்லாந்தர் ஆட்சிபுரிந்த காலத்திலே இவ்வாலயம் அழிக்கப்பட புனிதரின் திருச்சொரூபத்தை, கத்தோலிக்கர் தம்மகத்தே பரிசுத்தமாய் காத்துவந்தனர். இத் திருச்சொரூபம் ஆலயம் ஒன்றிலேயே தூக்கி வைக்கப்படவேண்டுமென்று தருணம் பார்த்திருந்த மக்கள் சந்தோமிங்கோ குடியிருப்பென்றும் பின்பு புறக் குடியிருப்பென்றும் அழைக்கப்பட்ட தற்போதைய ஆலயம் அமைந்துள்ள இடத்தில் வசதிக்கேற்ப ஆலயம் அமைத்து வழிபாடுகள் செய்துவந்தனர். 1772-ம் ஆண்டில் கல்லால் ஆன ஒரு சிற்றாலயம் இவ்விடத்தில் இருந்தது என ஒல்லாந்தர் தோம்பு ஒன்று சான்று பகர்கின்றது. இந்த ஆலயமே 1888ல் இன்றுள்ள அழகுறு ஆலயத்திற்கு இடம் கொடுத்தது என அறியக் கிடக்கின்றது.

### புதிய ஆலயம் புகுந்தார்

1888-ம் ஆண்டு யாழ். பேராலய மூப்பர் முதலியார் யோசவ் புவிமனசிங்கி அவர்கள் அடிக்கல்நாட்ட, இவ்வாலயத்தின் முதல் மூப்பரும் கட்டிடக் கலைஞருமாகிய திரு. யாக்கோபு சாமுவேல் என்பவரின் பொறுப்பில் இவ்வெழில் மிகு ஆலயம் உருப்பெறல் ஆயிற்று. 1894ல் இவ்வாலயச் சுவர்கள் முடிந்திருந்தநிலையில் குருவாக இருக்கும்போதே இவ்வாலய உருவாக்கத்தில் அக்கறைகொண்டிருந்த யாழ். மறை மாவட்ட ஆயர் மேன்மைதங்கிய யூலன் ஆண்டகை அவர்கள் இதை வந்து பார்வையிட்டு அடுத்த மூன்று ஆண்டுகளிலே பூர்த்தியாக்கப்படவும் பாவனைக்கு உட்படுத்தப்படவும் தமது ஆக்கம் நிறைந்த பங்களிப்பை செய்யலானார். 1877-ம் ஆண்டிலே புனிதஅருளப்பர்ஆலய பங்குத் தந்தையாக அமலமரித் தியாகி பிதா செபஸ்ரியன்அந்தோனி அடிகள் பொறுப்பேற்று திருமறையை இங்கு வளர்த்தார். அவர் இங்கு இருந்த இவ்வேளையிலே நீர்வேலி, கோப்பாய் என்னும் இடங்களில் புதிதாக திருமறையை அறிமுகம்செய்தும் நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலய மக்களின் மறை வாழ்வுக்கு மறுமலர்ச்சி கொடுத்தும் மறைப்பணிபுரிந்தார். அருளப்பர் ஆலயத்திற்கு தகுந்ததொரு குருமனையையும், அமைக்க தீர்மானம் கொண்டு தற்போதைய குருமனையை 1898ல் ஆரம்பித்தார். ஆலயத்தின் முன்னால் பொற்குடத்திற்கு பொட்டிட்டாற் போல அமைந்திருக்கும் மணிக்கோபுரம் 1905-ம் ஆண்டு வர்த்தகர் சூசைப்பிள்ளை என்பவரின் நன்கொடையாக அமைக்கப்பட்டது.

### புது வாழ்வுக்கு வழியானார்

இன்று நூறு ஆண்டுகளின் பின் காலத்தால் அழியாது புதுமையும் எழிலும் பரப்பி நிற்கும் இவ்வாலயம் கல்லாலான கட்டிடத்தில் எம் புனிதர் குடிகொள்ளுமுன் மக்கள் உள்ளத்திலேயே கோவில் கொண்டு ஆட்கொண்டமைக்கு சான்று பகர்ந்து நிற்கின்றது. இப் புனிதரை அவர்கள் அம்மானை இசைத்துப் பாடியும் நாட்டுக்கூத்து அமைத்து மேடையேற்றியும், பாக்கள் பல புனைந்து பண்ணிசைத்தும் தமது இதய புனிதராக போற்றிவந்திருக்கின்றனர். இப் புனிதரும் தம் பக்தர்களை அன்புத் தாயென அரவணைத்து காத்து வளர்த்து உறவாடி மகிழ்பவராய் குடிகொண்டிருக்கிறார்.

திருமறைப் பற்றும் பணியார்வமும்கொண்ட மக்க

ளாக தம் பக்... வாக்கிவரும் ... திருத்தொண்டு... களில் சிலை... தேர்ந்தெடுக்க... பக்குவப்படுத்... யார்களின் ... திருக்கோவி... தம்மைப் ம...



### அன்புடன் அழைக்கின்றோம்

23-6-89 மாலை 5-00 மணி
நற்கருணைவிழா

24-6-89 காலை 6-15 மணி
திருநாள் திருப்பலி
திருச்சொரூப பவனி

24-6-89 மாலை 5-00 மணி
நூற்றாண்டு மலர்
சஞ்சுவாம் அம்மானை
வெளியீட்டு விழாவும், கலைநிகழ்ச்சிகளும்

25-6-89 மாலை 5-30 மணி
சஞ்சுவாம் நாட்டுக்கூத்து

பிரதம அதிதி
யாழ். மறைமாவட்ட ஆயர்
பேரருள் கலாநிதி
வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை

சிறப்புரை :
யாழ். மாவட்ட அரசஅதிபர்
உயர் திரு. அன்ரன் அல்பிறட்

### செய...
### ஆலய...

யேசுக்கிறிஸ்து ... சாட்சிகளாய் ... வாக்க, இப்பு... லாக இங்கு நி... நற்குருக்களை, ... வழி பணிகள் ...

## வாழ்த்துகி...


**A. M. P. ASSOCIATES LTD,**

CIVIL ENGINEERING AND BUILDING CONTRACTORS,

**859/4, HOSPITAL ROAD, JAFFNA.**

**டயாணி**

**எலக்றிக்கல்ஸ் இன்டஸ்றீஸ்**

224, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**A. J... ASSOC... Constru...**


Govt. Approved ... Suppliers and T...

**234, STANL... JAFF...**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ப 100 -வது ஆண்டு விழா மலர்

## யாழ்ப்பாணம்



# ஆசியுரை

## யாழ். ஆயர் பேரருள் கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள்



யாழ். பேராலயத்தில் இணைந்து, பின்னிப்பிணைந்து வாழ்ந்து கைகோத்து வளர்ச்சியடைந்த சுண்டுக்குளி புனித ஸ்நாபக அருளப்பரின் இன்றைய ஆலயம் நூற்றாண்டு காணுகிறது. இந்த ஆலயம் கட்டப்பட முன்பே இரண்டரை நூற்றாண்டுகளாக சுண்டுக்குளியிலே புனித ஸ்நாபக அருளப்பரின் பாதுகாவலிலே விசுவாசம் முளைத்து, தழைத்து, வளர்ந்து இருந்ததை வரலாறு காட்டுகிறது.

இவற்றையெல்லாம் அறியும் பொழுது கடவுளுடைய கரத்திலே கருவிகளாக அமைந்து தம் வாழ்வை அர்ப்பணித்த திருமறைத் தொண்டர்களை நன்றியோடு நினைவு கூருகின்றோம். இந்தத் தியாகிகளின் பாதையிலே சுண்டுக்குளி மக்கள் மறை அறிவிப்பில் ஆர்வம் கொண்டவர்களாக வாழ்ந்து வந்திருக்கின்றார்கள்.

இப்பங்கின் இன்றைய குடும்பங்கள் ஒவ்வொன்றும முதிர்ச்சிநிறை இல்லத் திருச்சபையாக உயிரூட்டத்துடன் இயங்கித் தம் தலைவர் கிறிஸ்துவுக்கு ஒப்பற்ற சாட்சிகளாக விளங்க கிறிஸ்துவின் முதற் சாட்சியான புனித ஸ்நாபக அருளப்பர் அருள் பாலிக்க வேண்டி நூற்றாண்டு மகிழ்ச்சியில் கலந்து பங்கு மக்களை ஆசீர்வதிக்கின்றேன்.

## பங்குத்தந்தை அருட்கலாநிதி இரா. யோசவ்



யேசு பெருமானின் விண்ணக மதிப்பீடுகளுக்கு விரிய முறையிலே உயிர் கொடுத்து வாழ்ந்த உத்தமர்களே, புனிதர்கள் எனப் போற்றப்படுபவர்கள். இவர்கள் மக்களின் விசுவாச வாழ்விற்கு வழிகாட்டிகளென திருமறையால் ஆலயபீடத்தின் மகிமைக்கு உயர்த்தப்படுகின்றனர். ஒரு புனிதரை மக்கள் வணங்கும் பொழுது அவருடைய இலட்சியங்களையே வணங்குகின்றனர்.

புனித ஸ்நாபக அருளப்பர் நற்செய்தி ஏடுகளிலே நாம் சந்திக்கும் ஓர் உயர்ந்த ஞானி. அவர் காற்றிலே அசையும் நாணலைப் போன்று அல்லாது உயர்ந்த இலட்சியங்களை உயிரிலும் மேலாய்மதித்து நிலைத்தவர். அறத்தை நிலைநாட்ட தம் சிரசையே தானம் செய்தவர். தவத்தின் கோலமெனவும் வெறுமையின் உருவமெனவும் வாழ்ந்து அவ்வழியே இறைவனைச் சந்திக்கும் பாதையென்று பறைசாற்றியவர். இப்புனிதரை தங்கள் வழிகாட்டியாகவும் பரிந்துரையாளராகவும் சுண்டுக்குளி மக்கள் பெற்றமை பேறுடைத்தாகும். இப்பங்கிலே பணியாற்றிய கடந்த 5 வருடங்களிலே எம் புனிதர் ஒரு புதுமை நிறை காவலரென நான் அனுபவ வாயிலாய் கண்டுள்ளேன். இவருடைய வழிகாட்டலிலே இவ்வுலகின் வெற்றிச் சின்னங்களை வணங்கி, வாழ்வதைத் துறந்து, உண்மையை வணங்கி நன்மைக்கு மட்டும் அடிமைப்பட்டு வாழும் பக்தர்கள் பெருக வரம் கேட்டு புனிதரைப் போற்றுகிறேன். பக்தர்களை வாழ்த்துகிறேன்.

## ஆலயசபை செயலர் சொலமன் சூ. சிறில்



யாழ்பாடிப் பரிசுபெற்ற எழில் நகராம் யாழ். நகரில் பண்டுதொட்டுப் படிப்பாளர், படைப்பாளர், பகுத்தறிவாளர் பலரைப் பாங்குடன் பரவலாகப் பாரெங்கும் பரப்பி புகழ்படைத்த பிரபுக்கள் குடியிருப்பாம், சுண்டுக்குளி திருமுழுக்கு அருளப்பர் ஆலயத்தின் நூற்றாண்டு விழாவைக் காணும் பேற்றை எமக்கு அளித்த இறைவனுக்கும் இறை முன்னோடியாகிய எங்கள் புனிதருக்கும் முதற்கண் நன்றி கூறுவதில் மனநிறைவு அடைகிறேன்.

(7-ம் பக்கம் பார்க்க)

...ம் பக்தர்களை உரு
...ரும் புனிதர் தேவ
...தாண்டுக்கும் இவர்
... சிலரை இறைவன்
...தடுக்கக் கூடிய தாய்
...படுத்தியுள்ளார். அடி
...ன் உள்ளத்தில்
...கோவில் கொண்டு
...ப்ம போன்று

தியாக உள்ளங்களை, தங்கள் ஆற்றல்கள் செல்வங்களை, ஆலய வளர்ச்சிக்காய் அவ்வப்போது உவப்புடன் செலவிட்ட தர்மசீலர்களை இன்று எமது சமூகம் நன்றிப் பெருக்குடன் நோக்கி இச்சான்றோர் வகுத்த பாதையிலே தொடர்ந்து நடக்க இரண்டாவது நூற்றாண்டு சகாப்தத்தில் அடியெடுத்து வைக்கின்றது.

## ...செயலர், ...லய சபை.

...றிஸ்து வானவரின் ...ளாய் அவர்களை உரு ... இப்புனிதரின் சாய ...கு நின்று உழைத்த ...களை, பக்தி சபைகள் ...ணிகள் பல ஆற்றிய

இது ஒரு வெற்றி நடையாகவே இருக்குமென்பதைக் கூறிக் கொண்டிருக்கும் அடையாளங்களாய் மக்களின் தியாகத்தில் மலர்ந்த ஆலய புனரமைப்பு, புதிய பங்கு மண்டபம், திரு. இராஜன் டோமினிக் குடும்பத்தினரின் நன்கொடையில் மலர்ந்த புதிய அரங்கு என்பவையும் மகா ஞானஒடுக்க அருள் நிகழ்வுகளும் பறைசாற்றுகின்றன. சென்றுவிட்ட காலத்தை நன்றியுடன் நினைவில் கொண்டு வருங்காலம் தரும் அறைகூவல்களுக்கு முகம் கொடுக்க எமது புனிதரின் பக்தர்கள் மனம் கொண்டுள்ளனர் என்பதின் அடையாளமாக நூற்றாண்டு விழாவின் போது 1893இல் இயற்றப்பட்ட சஞ்சுவான் அம்மானை புதிதாகப் பதிக்கப்பட்டு வெளியிடப்படுகிறது. 1915ம் ஆண்டு எழுதப்பட்ட சஞ்சுவாம் நாட்டுக்கூத்து மேடையேறுகிறது. வெளியிடப்படும் நூற்றாண்டு நினைவுமலர் தாங்கிவரும் ஆக்கங்கள் புதுவாழ்வுக்கு வழிகாட்டி நிற்கின்றன.

...கின்றோம்

J. R.
...CIATED
...truction,
...proved Contractors
... and Transporters.
...NLEY ROAD,
...AFFNA.

முருகன்
எலக்றிக்கல்ஸ்
ஸ்ரோர்ஸ்
6/8, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

JAFFNA
PAINT HOUSE
21, POWER HOUSE ROAD,
JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

0 உலக நாடுகள் கண்டனம் 0 மாணவர் கொந்தளிப்பு

# சீனுவில் மக்கள் முன்னிலையில் பலருக்கு மரண தண்டனை தீர்ப்பு

(பீக்கிங்)

**சீனுவில் மாணவர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மேலும் பலருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. சீனுவின் கிழக்கு நகரான ஜினா லில் சுமார் பத்தாயிரம் பேர் முன்னிலையில் இந்த மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டது. இதேவேளை அண்மையில் மரண தண்டனை வழங்கப்பட்ட மூவருக்கும் நேற்று முன்தினம் உலக நாடுகளின் எதிர்ப்பின் மத்தியிலும் தண்டனை நிறைவேற்றப் பட்டது.**

சீனுவில் அண்மையில் இடம் பெற்ற மாணவர் ஜனநாயக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு, அரசுக்கு எதிராக வன்முறையில் ஈடுபடுமாறு மக்களைத் தூண்டியமைக்காகவே மேலும் பலருக்கு நேற்று முன்தினம் ஜிலாலில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் முன்னிலையில் நீதிமன்றம் மரண தண்டனைத் தீர்ப்பளித்தது.

இராணுவம், பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டோர் பகுதிபகுதியாகப் பிரிக்கப்பட்டே நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு வருகிறார்கள். இதில் குற்றம் எதுவும் செய்யாத பலரும் மரண தண்டனைத் தீர்ப்பிற்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கடந்த 16ந் திகதி சீன உயர் நீதிமன்றால் மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்ட மூவருக்கும் நேற்று மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. சீனுவில் மரண தண்டனை பெற்றவரை துப்பாக்கியால் சுட்டுக் கொல்வதன் மூலமே இத்தண்டனை நிறைவேற்றப்படுவதுவழமை. இவ்வாறே அந்த மூவரும் முழங்காலில் நிற்க விடப்பட்டு கைகள் பின்னுலும், கண்கள் கறுப்புத் துணியாலும் கட்டப்பட்ட நிலையில் பிடரிப் பகுதியில் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

சீனுவில் இந்த ஜனநாயகப் போராட்டத்தை மாணவர்களே ஆரம்பித்தனர். எனினும் மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட மூவரில் ஒருவர் வேலை தேடுபவர். மற்ற இருவரும் ஆலைத் தொழிலாளர். இந்த மூவரினதும் மேன்முறையீட்டை சீன உயர் நீதிமன்றம் நிராகரித்ததை அடுத்தே தண்டனை உடன் நிறைவேற்றப்பட்டது.

மேலும் மரண தண்டனை விதிக்கப்பட்ட எண்மரிலும், நேற்று மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களிலும் மாணவர்கள் எவருமில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்த எட்டுப் பேருக்கும் இன்று மரண தண்டனை நிறைவேற்றப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

### உலக நாடுகள் பலத்த கண்டனம்

சீன அரசின் இந்த நடவடிக்கையை சர்வதேச நாடுகள் பல ஒருமித்த குரலில் கண்டித்துள்ளன. தீர்ப்பை உடன் ரத்துச்செய்யக்கோரி பல நாடுகள் சீனத் தலைவர் திரு. லீ-பெங்கிற்கு அவசர தந்திகளை அனுப்பியிருந்தபோதும் அவர் இவற்றைப் பொருட்படுத்தவில்லை.

இச்செயலை வன்மையாகக் கண்டித்துள்ள நாடுகள் பல சீனுவுடனுன உறவுகளைத் துண்டிப்பது தொடர்பாக தற்போது ஆராய்ந்து வருவதாகவும் கூறப்படுகிறது.

அரசின் இச்செயல் அடங்கிப் போயிருந்த மாணவர் ஆர்ப்பாட்டத்தை தூண்டி விட்டுள்ளதாகவும் தற்போது அங்கு பெரும் கொந்தளிப்பு நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

## தியனென்மென் சதுக்கத்தில் ஆவேச கவிதைகள்

மாணவர்களின் போராட்டத்துக்கு ஆதரவாக தியனென்மென் சதுக்க வீதிகளில் பல ஆவேசக்கவிதைகள் அடங்கிய பெரிய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. அக்கவிதைகளில்,

மயிர்க்கால்கள் குத்திட்ட கோபம்......
நாம் ஒரு முடிவோடு இருக்கிறேம் !
வானத்தை நொறுக்கும் வேகத்துடன்
நாம் கனவிலும் குமுறுகிறேம்......;
தளவாடங்களைத் தயார் செய்யுங்கள் !
தியனென்மென் சதுக்கம் போவோம், !
பசி வயிற்றைப் பிளக்கட்டும்......
சோறு தின்பதற் கல்ல......
யாங்ஷாங் கூனின் சதையைச்சாப்பிட.
தாகம் எடுக்கட்டும்......,
தண்ணீர் குடிப்பதற்கல்ல......,
லீபெங்கின் ரத்தத்தை ருசிக்க ! !

## துடுப்பாட்டம், பந்து வீச்சு கிரிக்கெட் உலகின் தலைசிறந்த இருபது வீரர்

(லண்டன்)

கிரிக்கெட் உலகின் தலைசிறந்த பந்து துடுப்பாட்டக்காரர்களினதும், சிறந்த பந்து வீச்சாளர்களினதும் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. துடுப்பாட்டக்காரர்கள் வரிசையில் இலங்கை வீரர் அர்சுனு ரணதுங்க எட்டாம் இடத்தை வகிக்கிருர்.

பாகிஸ்தான் வீரர் யாவிட் மியான்டாட் துடுப்பாட்டத்திலும், நியூஸிலாந்து வீரர் ரிச்சர்ட் ஹாட்லி பந்து வீச்சிலும் முதலிடத்தைத் தக்க வைத்துள்ளனர். ஆஸ்திரேலிய வீரர் டீன் ஜோன்ஸ்சும் இப்பட்டியலில் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

**துடுப்பாட்டம்:**

யாவிட் மியான்டாட் (பாகிஸ்தான்) 903, ரிச்சி ரிச்சர்ட்சன் (மே. இந்தியா) 891, திலீப் வெங்ஸர்கார் (இந்தியா) 760, விவியன் ரிச்சர்ட் (மே. இந்தியா) 758, மார்டின் குரோ (நியூஸிலாந்து) 757, அலன் போடர் (ஆஸ்திரேலியா) 755, டெஸ்மன் கெயின்ஸ்(மே. இந்தியா) 745, அர்சுனு ரணதுங்கா [இலங்கை] 677, மார்க் கிறிபச் (நியூஸிலாந்து) 659, டீன் ஜோன்ஸ் [ஆஸ்திரேலியா] 651.

**பந்து வீச்சு:**

ரிச்சர்ட் ஹாட்லி [நியூஸிலாந்து] 900, மல்கம் மாஸல் (மே இந்தியா) 883, இம்ரான் கான் [பாகிஸ்தான்] 815, கபில் தேவ் [இந்தியா] 656, கோட்னி வால்ஸ் [மே. இந்தியா] 636, புறூஸ் றீட் [ஆஸ்திரேலியா] 634, அஸ்ரப் அயூப்(இந்தியா) 625, கேட்லி அம்புறூஸ் [மே. இந்தியா] 619, கிரஹாம் டில்லி [இங்கிலாந்து] 607 இயன் பிஷப் [மே. இந்தியா] 586.

## தமிழக சட்ட மேலவைக்கு நாவலர் நெடுஞ்செழியன்?

(சென்னை)

தமிழகத்தில் விரைவில் அமைக்கப்படவிருக்கும் சட்டமன்ற மேலவைக்கு அரசியல் ஞானமும், தமிழ்புலமையுமிக்க நாவலர் நெடுஞ்செழியனை நியமிக்க முதலமைச்சர் திரு. கருணுநிதி முடிவு செய்திருப்பதாக தமிழக பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இப்பதவிக்கு முத்தமிழ் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் சிபார்சு செய்யப்பட்டிருந்த போதும் அவரது முதுமை காரணமாக இம்முடிவு மாற்றப்பட்டுள்ளது.

இதனைவிட மாநில அரசினுல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள பாரதிதாசன் நூற்ருண்டு விழா குழு தலைவராகவும் நாவலர் நெடுஞ்செழியன் பொறுப்பேற்கவுள்ளார். (ச)

## இராமநாதன் நுண்கலைக்கல்லூரியில் பயில்வோர்களுக்கு பட்டதாரி அந்தஸ்து!

(யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் பயில்வோர் இனிமேல் பட்டதாரி அந்தஸ்தைப் பெறவுள்ளனர்.

இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் தற்போது கர்நாடக சங்கீதம். பரதநாட்டியம், வீணை என்பனவற்றை பயில்வோர் 'டிப்புளோமா' அந்தஸ்திலேயே தற்போது வெளியேறுகின்றனர்.

இந்த நுண்கலைக்கழகத்தின் செயல்பாடுகளை விஸ்தரிப்பதற்காக அண்மையில் ஒரு நிர்வாக கமிட்டி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த கமிட்டி இராமநாதன் நுண்கலைக் கழகத்தை விஸ்தரிப்பதற்கான தனது ஆலோசனை அறிக்கையை சமர்பிக்குமென்றும் இவ்வறிக்கை மேலிடங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டால் இராமநாதன் நுண்கலைக் கல்லூரியில் நுண்கலைகளைக் கற்பவர்கள் பட்டதாரிகள் அந்தஸ்த்தைப் பெற்றுக் கொள்வார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளிலுள்ள ஆசிரியர் பற்றுக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு மேலும் 1,500 ஆசிரியர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

## பெய்ருட்டில் பலஸ்தீனிய அகதிகள் கிராமங்கள் மீது இஸ்ரேல் விமான தாக்குதல்

(பெய்ருட்)

லெபனுன் தலைநகர் பெய்ருட் அருகே உள்ள பலஸ்தீன அகதிகள் கிராமங்கள் மீது இஸ்ரேல் போர் விமானங்கள் மேற்கொண்ட பலத்த தாக்குதல்களில் பொது மக்கள் பலர் கொல்லப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

'ஷா' மலை அடிவாரத்தில் உள்ள பலஸ்தீன அகதிகள் வசிக்கும் பல கிராமங்கள் மீதே இத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டது. நான்கு ஹெலிகாப்டர்களின் உதவியுடன் போர் விமானங்கள் பலத்த தாக்குதலை சுமார் இரண்டு மணி நேரம் மேற்கொண்டதாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

பலஸ்தீனிய அமைப்பின் மக்கள் முன்னணியின் தலைமையக இலக்குகள் மீது இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக இஸ்ரேலிய பாதுகாப்[illegible]டாரங்கள் தெரிவித்துள்ளன. எனினும் இத் தலைமையகம் சேதத்திற்குள்ளாகவில்லை என்றும் பொது மக்கள் பலரே கொல்லப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேலிய போர் விமானங்களை எதிர்த்து தாக்குதல்கள் நடத்தப்பட்ட போதிலும் அவை சேதத்திற்குள்ளாக்கப்படவில்லையென்று இஸ்ரேல் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இஸ்ரேலின் இந்த நட[illegible] ளன.

## மன்னுரில் விதவைகளுக்கு செஞ்சிலுவைச் சங்கம் நிவாரணம்

(மன்னுர்)

மன்னுர் மாவட்டத்தில் அண்மைக் கால வன்முறைச் சம்பவங்களினுல் கணவன்மாரை இழந்த விதவைகளுக்கும், உழைப்பாளிகளை இழந்த குடும்பத்தினருக்கும் செஞ்சிலுவைச் சங்கம் நிவாரணப் பொருள்களை வழங்கியது.

செஞ்சிலுவைச் சங்கத்தின் மன்னுர்ப் பிரிவு 350 ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியுள்ள இந்த நிவாரணப் பொருள்களை மாவட்ட ரீதியில் தெரிவு செய்யப்பட்ட பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கியது.

மன்னுர் செபஸ்தியார் ஆசனக் கோவிலில் வைத்து இந்த நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டன.

## பம்பாய் வெங்காயம் அதிக விளைச்சல்

(யாழ்ப்பாணம்)

அராலிப் பகுதியில் இம்முறை பம்பாய் வெங்காயம் அமோகமாக விளைந்துள்ளது.

இப்பகுதி விவசாயிகள் பம்பாய் வெங்காயம் பயிரிடுவதில் [illegible]டிய ஆர்வமே இதற்குக் காரணமென்று விவசாயப் பகுதி உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்ஸ்பெக்டர், குழந்தைகள் கண்ணிவெடிக்குப் பலி

(கொழும்பு)

பொல்காவலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும் அவரது இரண்டு குழந்தைகளும் மற்றும் ஐந்து பொலிஸாரும் பிரயாணம்செய்த ஜீப் வண்டி கண்ணிவெடியில் சிக்கியதால் அதில் சென்ற அனைவரும் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்.

கடந்த திங்கட்கிழமை அம்பன்பொலயிலுள்ள நாரம்மல என்ற இடத்தில் இந்தச் சம்பவம் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி, பொலிஸ் இன்ஸ்பெக்டர் டப்ளியூ. எம். நாயகரட்ன, அவருடைய எட்டு வயது மகன், ஐந்து வயது பெண் குழந்தை மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் நிகால், தர்மசேன, றிசேர்வ் கான்ஸ்டபிள்கள் தென்னக்கோன், நிமால், பொலிஸ் சாரதி சிறிசேன ஆகியோர் இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டனர்.

## மிருதங்க

(4ம் பக்கத் தொடர்ச்சி)

துறையில் அவர் மேலும் முன்னேறவேண்டும் என்றார்.

அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தைச் சேர்ந்த திரு. ந. நமசிவாயம் பேசியபோது கூறியதாவது;

''கண்ணதாசனை அவரின் இளம்பிராயம்முதல் அவதானித்துவருகிறேன். இன்று மதிக்கக்கூடிய நிலையில் அவர் இக்கலையில்வளர்ந்துவிட்டார். இந்தியாவில் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தில் இக்கலையை பயின்றுகொண்டிருந்தபோது அங்கு சென்ற சீர்காழி கோவிந்தராஜன், கண்ணதாசனின் திறமையைப் பார்த்துவிட்டு ஏன் இவரை இன்னும் முதலாம் வகுப்பிலேயே வைத்திருக்கிறீர்கள்? இரண்டாம் வகுப்பில் பயிற்சிக்கு அனுப்பலாமே என்று கேட்டாராம்.

நான் இவரது இசைத்திறமையைப் பாராட்டி எமது இசைக்கல்லூரியில் ஒரு விழா எடுக்கத் திர்மானித்துள்ளேன் என்று கூறினர்.

இசை விரிவுரையாளர் திரு. ஏ. கே. கருணாகரன் பேசுகையில் கூறியதாவது; ''அரங்கேற்றம்என்பதுஒரு லைசென்ஸ் மாதிரி. இந்த லைசென்ஸைப் பெற்றுக்கொண்டுவிட்டார் கண்ணதாசன். இனி அவர் இடங்களுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் ஏற்றமாதிரி தன் பயிற்சியை வெளிப்படுத்தவேண்டும். சக கலைஞர்களோடுசிரித்து மகிழ்ந்து வாசிக்கவேண்டும்'' என்றார்.

இளங்கலைஞர் மன்றத்தின் தலைவர் திரு. பொன். சுந்தரலிங்கம், மிருதங்க விரிவுரையாளர் பிரம்மஸ்ரீ எஸ். சோமாஸ்கந்தசர்மா, யாழ். ரசிக ரஞ்சன சபா கே. வி. தம்பு, திரு. எஸ். தியாகராஜா, திருமதி குமாரசாமி, கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் ஆகியோரும் இந்த வைபவத்தில் பேசினார்கள். திருமதி பார்வதி சிவபாதம் கண்ணதாசன்பற்றி இசைப்பாடல் ஒன்றுபாடினர்.


**ஹரன் சினிமா**
(யாழ்ப்பாணம்)
3-வது வெற்றி வாரம்
சத்தியராஜ்—நதியா நடித்த
**சின்னத்தம்பி பெரியதம்பி**

**நியூசாந்தி** யாழ்நகர்
தினசரி 10-30, 2-30, 4-45
பயங்கரக் கராட்டிகள் வாள்சண்டைகள், கார் ஓட்டங்கள் நிறைந்த படம்.
**MAJESTIC THUNDERBOLT**
(C/scope)


## புதிய தேர் வெள்ளோட்டம்

[யாழ்ப்பாணம்]

புளியங்கூடல் பெருந்தனைப்பதி மகாமாரி அம்பாள் தேவஸ்தான தேர்த்திருவிழா நாளை சனிக்கிழமை காலை எட்டுமணிக்கு நடைபெறவுள்ளது. அன்று பக்தர்களுக்கு அன்னதானம் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

பிள்ளையாருக்கும், முருகனுக்கும் புதுத்தேர்நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதன் வெள்ளோட்டம் இன்று வெள்ளிக்கிழமை மாலை நடைபெறும்.

## நிதி ஒதுக்கீடு

[பண்டத்தரிப்பு]

மாதகல் சென். ஜோசவ் கல்லூரியில் மூன்று லட்சம் ரூபா செலவில் புதிய இருமாடிக்கட்டடம் ஒன்று விரைவில் நிறுவப்படவுள்ளது.

கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் விடுத்திருந்த கோரிக்கைக்கு இணங்க கல்வித்திணைக்களம் இந்த மாடிக்கட்டிடத்திற்கான நிதியை ஒதுக்கீடு செய்துள்ளதாக கல்லூரி அதிபர் திரு. ச. அருள் சுப்பிரமணியம் தெரிவித்தார்.

## இராசி பலன்

23-06-1989

சதுர்த்தி காலை 9.06 வரை; அவிட்டம் பின் இரவு 3.46 வரை, சித்த யோகம்; இராகு காலம் 10.25 முதல் 11.59 வரை, அவசிய கருமங்கள் செய்யலாம்.

மேடம்: தெய்வ அனுக்கிரகம், புதிய முதலீடு, குடும்ப மகிழ்ச்சி.

இடபம்: எண்ணங்கள் பலிதமாகும், அரசியல் தர்க்கம், விருந்தினர் மகிழ்ச்சி, கௌரவம்.

மிதுனம்: குழம்பிப்போதல், தவறான வாக்குறுதி, குடும்பப் பிரிவு, பணக்கஷ்டம், தொழில் சிக்கல்.

கடகம்: வெறுப்படைதல், வேலைப்பளு, அயலவர் தொல்லை, சிறுபிணி, குடும்பத்தில் சந்தேகம்.

சிங்கம்: நீண்டநாள் பிரச்சனை தீரும், விவாக நிச்சயம், பணவரவு, புதிய முயற்சி, மனைச்சிறப்பு.

கன்னி: காதல் வெற்றி, பெரியோர் பாராட்டு, உல்லாசப்பயணம், அறிஞர்உதவி. குடும்பச்சிறப்பு.

துலாம்: விரக்தியான போக்கு, குடும்பக்கவலை, அந்நியவாசம், பகைவர்தொல்லை, பகை.

விருச்சிகம்: தொழில் நஷ்டம், குடும்பத்தில் சச்சரவு, காணிமூலமான பிணக்கு, மக்களால் கவலை.

தனுசு: மாமன் மூலமான உதவி, குடும்பபாசம், பணவரவு, கடித உறவு, ஆலயதரிசனம்.

மகரம்: எதிர்பாராத தொல்லை, கடன் சுமை, பெண்வழி துன்பம், மனைக்கஷ்டம், அலைச்சல்.

கும்பம்: மங்களகரமான காரியம், ஆபரண சேர்க்கை, தூரத்து உறவு, காரியசித்தி, தொழில் வெற்றி.

மீனம்: தொழில் [illegible]டம், மனச்சுமை, குடும்பச்சிக்கல், அதிகாரிகள் [illegible], சோம்பல்.

## தற்கொலை

[ஊர்காவற்றுறை]

சரவணை கிராமத்தைச் சேர்ந்த எழுபது வயது வயோதிபர் நோய் காரணமாக ஊர்காவற்றுறைக் கடலில் குதித்து தற்கொலை செய்து கொண்டார்.

0 0 0

குடும்பத் தகராறு காரணமாக இளம் குடும்பஸ்தர் ஒருவர் கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

கோண்டாவில் வடக்கு நாகமுத்து தேவராசா (வயது 26) என்பவரே தற்கொலை செய்து கொண்டவராவார்.

0 0 0

கணவனின் துன்புறுத்தல் தாங்காத மனைவி தற்கொலை செய்துகொண்டார். இச்சம்பவம் முறிகண்டி செல்வபுரம் என்ற இடத்தில் நடந்தது.

இராமு விஜயலக்ஷ்மி (வயது 26) என்ற பெண்ணே தற்கொலை செய்துகொண்டவராவார்.

கணவனிடம் கடன் காசு கேட்க வந்தவரை மனைவி ஏசியதால் கணவன் மனைவியைத் துன்புறுத்தியதாகவும் இதனால் மனமுடைந்த பெண் நஞ்சருந்தியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர் கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கும் பின்னர் யாழ். ஆஸ்பத்திரிக்கும் கொண்டுசெல்லப்பட்டு அங்கு சிகிச்சை பலனளிக்காததால் மரணமானதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. விசாரணை முடிவில் தற்கொலை எனத் தீர்ப்பளித்த மரண விசாரணை அதிகாரிசடலத்தை கணவனிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டார். (கு)

## ஆலயசபை

(5–ம் பக்கத் தொடர்ச்சி

அழகிய இவ்வாலயம் 1888ம் ஆண்டு கட்டிமுடிக்கப்பட்டது. எனினும் அதற்கு முன்னர் 1634ம் ஆண்டு முதல் சிறிய ஆலயமாகவிருந்து சுண்டுக்குளி வாழ் இறை மக்களின் ஆத்மீக தேவைகளைப் பூர்த்தி செய்துள்ளது என்பது வரலாறு.

வரலாற்றுச்சிறப்புமிக்க இந் நாளில் எங்கள் ஆலய உயர்வுக்ககாவும், வளர்ச்சிக்காகவும், ஆத்மீக வாழ்வுக்காகவும் உழைத்த, உழைக்கின்ற அனைத்து அன்புள்ளங்களையும் நாம் நன்றியுடன் நினைவுகூர்வது எம் கடமையும் பெருமையுமாகும்.

திருச்சபை ஓர் ஒன்றித்த புனித குலமாகும். எங்கு ஒன்றிப்பு, ஐக்கியம் இருக்கிறதோ அங்கே உறவு இருக்கும். அந்த உறவின் உயர்வே இன்றைய எமது ஆலய நூற்றாண்டு விழாவாகும். இது மகிமைக்குரியது. இன்றுபோல் என்றும் எம்மக்கள் இறையன்பிலும், பிறர் அன்பிலும் வாழ வாழ்த்துகிறேன்.

விழாவின் நிறைவுக்கு பங்களிப்பு, அன்பளிப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி.

## இப்படியும் நடக்கிறது

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலும், 'ரூபவாஹினியிலும், இந்திய எதிர்ப்புக் காட்டப்படுகிறதா? அதாவது, இந்திய திரைப்படப் பாடல்கள் - படங்கள்– நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுவது - ஒளிபரப்பப்படுவது தடைசெய்யப்பட்டுள்ளதா?

இதனை எழுதிக்கொண்டிருக்கும்வரை கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் இந்திய திரைப்படப் பாடல்களை ஒலிபரப்புவதை நிறுத்தவில்லை. ஆனால் 'ரூபவாஹினி' முந்திவிட்டதாகத் தெரிகிறது.

வழக்கம்போல் இடம்பெறும் தமிழ்த் திரைப்படம் (இம்முறை 'பாசமலர்' காண்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது) இடம்பெறவில்லை. மற்றுமொரு விளம்பர நிகழ்ச்சியான 'பொன்மாலைப்பொழுது'ம் ஒளிபரப்பப்படவில்லை.

காதோடு காதாக, 'ரூபவாஹினி'யில் இந்திய எதிர்ப்புப்பற்றி உத்தியோகபூர்வமாக எந்தவிதமுடிவும் எடுக்கப்படவில்லையாம். அங்கு கடமையாற்றும் தொழில் நுட்பவியலாளர்களின்மறுப்பினுல்தான் மேற்படி நிலைமை ஏற்பட்டுள்ளதாம்!

"ஊடுருவி"

## சோதிட ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்]

இலங்கை சோதிட ஆய்வு மன்றத்தின் மாதாந்த ஆய்வரங்கு ஞாயிற்றுக்கிழமை காலை நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது. ஆய்வரங்கில், சோதிடர் வி. சின்னத்துரையினுல் ''விவாககாலம்'' பற்றிய ஆய்வுக்கட்டுரை படிக்கப்படும்.

## நாளை கிளைக்குழு தேர்தல்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு ப. நோ. கூ. சங்கத்தின் கிளைக்குழுத் தேர் தேர்தல் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இதற்கான நியமனப் பத்திரங்கள் கடந்த சனிக்கிழமை உரிய கிளைகளில் வைத்து தேர்தல் உத்தியோகத்தரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இரண்டு கிளைகளில் போட்டியின்றி குழுக்கள் தெரிவுசெய்யப்பட்டன.

## விளையாட்டுபோட்டி

(யாழ்ப்பாணம்)

கைதடி சரஸ்வதி அறவழிப்பாலர் பாடசாலை வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நாளைமறுதினம் 25ம் திகதி கலைவாணி வித்தியாசாலைவளவில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தலைவர் ப. செல்லத்துரை தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் அறவழிப் போராட்டக்குழு இயக்குநர்கள் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்கிறார்கள்.

## யாழ். செயலக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

''வாரத்தில்மூன்றுநாட்கள் மட்டும் செயலாற்றி வந்த அரசாங்க செயலகம், அச்சுறுத்தல் காரணமாக முழுநாட்களும் செயற்படாமல் ஸ்தம்பித்தமையால் ஆயிரக்கணக்கான மக்கள் தமது நிவாரணப்பணத்தினை பெறமுடியாமலும் அத்தியாவசியத்தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமலும் பெரிதும் கஷ்டத்துக்குள்ளாகினர்.

இந்நிலையில் வடக்கு கிழக்கு மாகாண அரசு மேற்கொண்ட துரித நடவடிக்கைகள் காரணமாக மீண்டும் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் வழமை போன்று ஐந்து நாட்களும் செயற்படத் தொடங்கியுள்ளது. ஊழியர்களின் வரவு நாளுக்கு நாள் அதிகரித்து, முழுமையாகச் செயற்படும் நிலைக்கு முன்னேற்றம் கண்டுள்ளது.

அரசாங்க ஊழியர்கள் ஒவ்வொருவரும் அரசாங்கத்தின் சார்பில் மக்களுக்குச் சேவை செய்வதற்காக நியமனம்செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் என்பதைக் உணவத்திற்கொள்ளவேண்டும். வேலைக்குச் செல்லாதிருக்கும் ஒவ்வொரு ஊழியரையும் மக்கள் விரோத சக்தியாக மாகாண அரசு கணிப்பிடவேண்டிவரும் என்பதைச் சகல அரசாங்க ஊழியர்களும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

அடுத்த வாரம் முதல் பாதிக்கப்பட்ட மக்களுக்கான இந்திய நிவாரணப் பொருள்களும், பாடசாலைப் பிள்ளை

(8-ம் பக்கம் பார்க்க)


**உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான கம்பியூட்டர் கல்வி**

DIPLOMA IN DATA PROCESSING AND COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE

**ஆரம்பம்: 24 - 6 - 89 (சனி, ஞாயிறு) வகுப்புகள்**
**பயிற்சிக்காலம்: 3 மாதம்**

சேரும்போது செலுத்தவேண்டியது 500 மாத்திரம். O/L படித்த இருபாலாரும் சேரலாம். குளிரூட்டப்பட்ட அறையில் கூடிய நேர செய்முறைப்பயிற்சி. IBM (COMPATIBLE) கம்பியூட்டரில் வழங்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். குறிப்பிட்ட தொகை மாணவ, மாணவியரே சேர்க்கப்படுவார்களாகையால் விண்ணப்பப்படிவத்தை பெற்றுப் பதிவு செய்து கொள்ளவும்.

விண்ணப்ப முடிவு திகதி: 23 - 6 - 89.

UNIKCO COMPUTER CENTRE
No. 5, மின்சாரநிலைய வீதி, [2-ம் ஒழுங்கை], யாழ்ப்பாணம்.
(... உப தபாற்கந்தோர் அருகாமை) (ஏ-285)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "உரிமைகளைப்பெற தொழிலாளர் ஐக்கியப்பட வேண்டும்"

(யாழ்ப்பாணம்)

''எமது உரிமைகளையும் வேலைக்கேற்ற சம்பளத்தையும் பெற்றுக் கொள்வதற்கு தொழிலாள வர்க்கம் ஐக்கியப்பட்டு ஒருமித்த குரலில் கோரிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும்.''

இவ்வாறு ஈழத் தொழிற் சங்க சம்மேளனத்தில் இணைந்துள்ள தென்மராட்சி மில் தொழிலாளர் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தென்மராட்சித் தொழிற் சங்க அமைப்பாளர் திரு. வா. செல்லக்கண்டு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

''வடக்கு -கிழக்கில் உள்ள தொழிலாளர்கள் பல்வேறு பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. அமைதியற்ற சூழ்நிலையை சாட்டாக வைத்து முதலாளிகள் தொழிலாளர்களின் உரிமைகளை வழங்க மறுப்பதுடன், சட்டப்படி கொடுக்க வேண்டிய சம்பளங்களைக் கூட கொடுக்காது தொழிலாளர்களை ஏமாற்றி வருவது வேதனைக்குரியது. இதே சமயம் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்கவென நிறுவப்பட்டுள்ள தொழில் இலாகாவும் அதன் அதிகாரிகளும் காட்டும் அசமந்தப் போக்கு தொழிலாளர்களின் தொழில் பாதுகாப்பிற்கு எந்தவித உத்தரவாதத்தையும் வழங்கவில்லை.

''இன்று மில் தொழிலாளர்களின் சம்பள விகிதங்கள் ஒரே இடத்தில் வெவ்வேறு அடிப்படையில் அமைந்துள்ளன. சம்பள ஏற்றத்தாழ்வு ஒருபுறம் இருக்க, தொழிலாளர்களைக் காரணமின்றி வேலை நீக்கம் செய்வதும் விபத்து ஏற்படும் பட்சத்தில் அவர்களுக்கு நஷ்டஈடு வழங்க மறுப்பதும் நாளாந்த நிகழ்வுகளாகிவிட்டன.

''தொழில் செய்யும் போது விபத்தில் சிக்கிய ஒருதொழிலாளி. அதற்குரிய நஷ்டஈட்டையோ அல்லது சுகவீனம் அடையும் வரையிலான சம்பள வசதிகளோ எதுவுமற்ற நிலையில் வேலையைப் பறிகொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையையும் தொழிலாள வர்க்கம் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

''ஆகவே மில் தொழிலாளர்கள் அனைவரும் ஓரணியில் திரண்டு, ஏனைய தொழிலாள வர்க்க சக்திகளோடு இணைந்து ஒருமித்தகுரலில் எமது கோரிக்கைகளை சமர்ப்பிப்பதோடு, பாட்டாளி வர்க்க அரசை நிறுவுவதற்கான பாதையில் வீறுநடைபோட்டு முன்னேற வேண்டும்''.

இக்கூட்டத்திற்கு தென்மராட்சி மில் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. சி. சின்னத்துரை தலைமை வகித்தார்.

# "மாணவரின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முன்வருக"

## தீவுப்பகுதி மாணவர் பேரவை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மாணவர்களின் பாதுகாப்பு குறித்து தீவுப்பகுதி மாணவர் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

''தற்போது எமதுபிரதேசத்தில் இடம் பெற்று வரும் செயற்பாடுகளால் மாணவர்கள் ஆசிரியர்கள் புத்திஜீவிகள் படுமோசமாகப் பாதிக்கப்பட்டு வருகிறார்கள்.

மாணவர்கள் கைதுசெய்யப்பட்டு தாக்குதலுக்குள்ளாகி கொலை செய்யப்பட்டுவரும் வேளையில் வேறுமாணவர்கள் பலவந்தமாகவும் அழைத்துச் செல்லப்படுகிறார்கள்,

மாணவர்கள் சுதந்திரமாகக் கல்வி கற்கக்கூடிய சூழ்நிலை இங்கு இல்லாத நிலையில் அவர்கள் தமது கல்வியை தொடருவது என்பது சாத்தியமற்ற செயலாகும்.

பல்வேறு அமைப்புக்கள் மாணவர்களின் உரிமையைப் உறுதிசெய்யக்கோரிய போதிலும் இன்னமும் சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்காதிருப்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். மாணவர் போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில்கூட ஆசிரியர்களும் மாணவர்களும் கொலை செய்யப்படுவது, மாணவர்கள் என்று தெரிந்தும் பலவந்தமாக அழைத்துச் செல்லப்படுவது போன்ற நிகழ்வுகள் மாணவர் உரிமையை வெகுவாக பாதிக்கும் செயல்களாகும்.

எத்தனையோ நலன் கருதும் அமைப்புகள் இருந்தும் இன்று எமது பிரதேசத்தில் மாணவர்கள் தாக்கப்பட்டுகொலை செய்யப்படுகிறார்கள் எனவே மாணவர்கள் விடயத்தில் அனைத்து மன்றங்களும் செயற்குழுக்களும் கவலையீனமாய் இருந்து விடக்கூடாது. மாணவரின் பாதுகாப்பை இவை உறுதிப்படுத்தி கல்வியை தொடர்வதற்கு வழி செய்ய முன்வரவேண்டும்.

# "கைதான மாணவர்களை விடுதலை செய்க!"

## சீனப் பிரதமருக்கு 'கைஸ்' கடிதம்

(யாழ்ப்பாணம்)

''சீனவில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அனைத்து மாணவர்களும் விடுதலை செய்யப்படவேண்டும்.''

மாணவர் இளைஞர் பொது மன்றம் ('கைஸ்') சீனப்பிரதமருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறது.

சீன மாணவர் போராட்டத்துக்கு ஆதரவு அளித்து இராணுவ வன்முறையை நீக்கக்கோரி இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

''அமைதியான முறையில் ஜனநாயகத்தின் வழியில் ஆயுதங்கள் எதுவுமின்றி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டிருந்த சீனமாணவர்களையும், மக்களையும் கொன்றொழித்ததை நாம் வன்மையாகக்கண்டிப்பதுடன் மனித உயிர்கள் ஈவிரக்கமற்ற ரீதியில் படையினரால் அழிக்கப்பட்டிருப்பது குறித்தும் நாம் ஆழ்ந்த கவலை அடைந்துள்ளோம்.

''சீன அரசு உடனடியாக துருப்பினரை மீளப்பெற்று, மக்களுக்கு எதிரான சகல வன்முறை நடவடிக்கைகளுக்கும் முற்றுப்புள்ளி வைப்பதுடன், எதுவித நிபந்தனையுமின்றி இராணுவச்சட்டத்தை வாபஸ்பெறவேண்டும்.

''இராணுவ நடவடிக்கைகளின்போது கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அனைத்து மாணவர்களையும் எதுவித நிபந்தனையுமின்றி விடுதலை செய்யுமாறு வேண்டுகிறோம்.

''வெகுஜன தொடர்பு சாதனங்களுக்கு மதிப்பளித்து சுயாதீனமாகவும், சுதந்திரமாகவும் இயங்க வழிசமைக்குமாறு கோருகின்றோம்.

''இந்த வன்முறையின்போது காயமடைந்தவர்களுக்கு சிகிச்சையளிக்க சுகாதார ஊழியர்களுக்கும், சுகாதார நிலையங்களுக்கும் சீன அரசு அனுமதி வழங்கவேண்டும்.

''மனித உரிமைகளுக்கு எதிரான சகலவிதமானவன்முறை நடவடிக்கைகளுக்கு எதிராகவும் நாம் அகிலம் பூராகக் குரல் கொடுப்போம்''.

இவ்வாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிக்கிறது.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1989ம் ஆண்டு ஜூன் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளிவிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/6/81. Eelanadu P. O. Box No: 49. Telegram, Eelanadu. Telephone; 22389. 24126.

# இன்று

## பயிற்சிக் கருத்தரங்கு

(சுன்னாகம்)

மருதனாமடம் கோட்டக் கல்விப் பிரிவிலடங்கும் கொத்தணி அதிபர்கள், பாடசாலை அதிபர்களுக்கான பயிற்சிக்கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் மருதனாமடம் கோட்டக்கல்வி அலுவலக பொறுப்பதிகாரி திரு. ஆர். கே, குலசேகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கிழக்கு அருள்மிகு சிவபூதராஜர் கோவில் நவக்கிரஹ பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

## பொங்கல் உற்சவவிழா

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்கு கோனாவளை வைரவர் ஆலய பொங்கல் உற்சவவிழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் நடைபெறவிருக்கிறது.

## கொழும்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கும், டீசல் 18 ரூபாவிற்கும், மண்ணெண்ணை 10 ரூபாவிற்கும் நடைபாதை வியாபாரிகளினால் விற்பனைசெய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்ட எரிபொருள்களின் வழக்கமான விலைகள் வருமாறு;-

பெற்றோல் லீற்றர் 16 ரூபா, டீசல் 9 ரூபா, மண்ணெண்ணை 7 ரூபா.

இதேநேரத்தில் நாட்டில் எரிபொருள்கள் போதியளவு கையிருப்பில் இருப்பதாகவும் இதற்குத் தட்டுப்பாடு நிலவுவதாகப் பரப்பப்படும் வதந்தியில் எதுவித உண்மையும் இல்லை என்றும் இலங்கைப் பெற்றோலியம் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

நாட்டின் சகல பகுதிகளுக்கும் வழமைபோல் எரிபொருள்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், எரிபொருள் விலையில் மாற்றம் இல்லை என்றும் கூட்டுத்தாபன [illegible] தெரிவித்துள்ளார்.

## அமைதிப்படை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

முப்பது பைந்து இரத்தம் வழங்கினார்கள்.

யாழ். போதனா வைத்திய சாலையில் இரத்தமில்லை என்பதனை அறிந்தே தாம் இரத்தம் வழங்கியதாகவும், இரத்த தானம்செய்ய அமைதிப் படையினர் பலர் முன்வந்தபோதிலும் வைத்தியசாலையில் வசதிக் குறைவு காரணமாக முப்பது பேரே இரத்தம் வழங்கினர் என்றும் அமைதிப் படையினர் தெரிவித்தனர்.

## மண்கும்பான்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாளருமான எம். லிங்கம் (வயது 34) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். இச்சம்பவம்பற்றித் தெரியவருவதாவது:-

நேற்று முன் தினம் மாலை யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு ஏழு மணியளவில் மண்கும்பான் பிள்ளையார் கோவிலடியிலுள்ள தமது மரக்காலையிலிருந்து வீட்டுக்குத் திரும்பிய இவர், நேற்று அதிகாலைவரை வீடுவந்து சேராததால் கிராம மக்கள் நூற்றுக்கணக்கில் திரண்டு இவரைத் தேட ஆரம்பித்தனர். நேற்றுக் காலையில் பற்றை ஒன்றிலிருந்து இவரது மோட்டார் சைக்கிளும் பின்னர் சடலம் மணல் மேட்டிலிருந்தும் மீட்கப்பட்டன.

தலை துண்டிக்கப்பட்ட நிலையில் வெட்டுக் காயங்களுடன் புதைக்கப்பட்டிருந்த இச்சடலத்துடன் வாள் ஒன்றும் மீட்கப்பட்டதாம். சடலம் பின்னர் மரண விசாரணைக்காக ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவரது கொலை மர்மமாகவே உள்ளது.

### அஞ்சலி

வர்த்தகர் லிங்கம் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் பொருட்டு நேற்று யாழ். நகரில் நகைக் கடைகள் சில பூட்டப்பட்டிருந்தன.

## போக்குவரத்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யர்களுக்கும் வேலைத்தலத்தில் போதிய பாதுகாப்பு வழங்கப்படும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலைக்குத் திரும்பும் ஊழியர்களுக்கு வேலை வழங்குவதற்காக டிப்போ முகாமையாளர்களும் ஊழியர்களும் டிப்போவில் இருக்கவேண்டும் இவர்களுக்கு வேலை வழங்குவதை பிராந்திய போக்குவரத்துச்சபைத் தலைவர்கள் உறுதி செய்யவேண்டும் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளையில் தென்பகுதியில்போக்குவரத்துச்சபைஊழியர்களின் வேலைநிறுத்தத்தில் எதுவித மாற்றமும் இல்லைஎன்றும்தனியார் பஸ்களும் சேவையில் ஈடுபடவில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## தென்பகுதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லுடன் மூடப்பட்டன.

ஒரு சில ரயில்கள் மட்டுமே சேவையில் ஈடுபட்டன.

மக்கள் லொறிகள் உட்பட பாதையில் ஓடிய சகலவிதமான வாகனங்களிலும் பிரயாணம்செய்தனர். பெரும்பாலானோர் வாகனங்களின் கூரைகளில் பிரயாணம் செய்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

இதேவேளையில் நாட்டின் போக்குவரத்துச் சேவை பாதிக்கப்பட்டிருப்பதால் ஏற்றுமதி இறக்குமதி மற்றும் சர்வதேச வர்த்தக நடவடிக்கைகள், உள்ளூர் வர்த்தக நடவடிக்கைகள் யாவும் பெரிதும் பாதிக்கப்பட்டன.

நாட்டின் உள்நாட்டு, வெளிநாட்டு பொருளாதார நிலை இதன் காரணமாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுவருவதாகவும், மக்கள் பல கஷ்டங்களை எதிர்கொள்ளவேண்டிய நிலை ஏற்படலாமென்றும் பொருளாதார, வர்த்தக வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன.

## யாழ். செயலகம்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு கொப்பி, புத்தகம், சீருடைக்கான துணிவகைகள் என்பனவும் வழங்கப்படவுள்ளது. கலவரங்களின்போது இறந்தவர்களுக்கான முழுமையான கொடுப்பனவுகளும் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

ஆகவே எதிர்காலத்தில் எத்தகைய அச்சுறுத்தல்கள், கெடுபிடிகள் நிகழ்ந்தாலும், யாழ். அரசாங்கச் செயலகம் தொடர்ந்து ஐந்து நாட்களும் செயல்படுமென்பதைப் பொதுமக்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.''

## விபரங்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு இந்திய வெளியுறவு அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பிரதமர் வெளிநாடுகளுக்கும் வெளிநாட்டுத் தலைவர்களுக்கும் எழுதும் கடிதங்களிலும் பிரதமருக்கு வெளிநாட்டுத் தலைவர்களிடமிருந்து வரும் கடிதங்களிலும் குறிப்பிடும் விடயங்களை வெளியிடுவது நடைமுறை அல்லவென்றும் அந்த அதிகாரி கூறினார்.

## இந்திய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## பிரதமர் கவலை

இதே வேளை, இந்திய அமைதிப் படை வாபஸ் பெறப்பட வேண்டுமென்று காலக்கெடு விதித்து அறிக்கைகள் விடுவதன் மூலம் இந்த விவகாரத்தைப் பகிரங்கப்படுத்தியது பற்றி இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி வருத்தம் தெரிவித்து இக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாகவும் அச்செய்தி மேலும் தெரிவித்தது.

## கிளிநொச்சியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் வீதியில் சென்றுகொண்டிருந்த ஒருவர் பலியானார். அவரின் சடலம் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது,

காயமடைந்த சுப்பையா முருகையா (வயது 19) கவலைக்கிடமான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (கு)

## இலங்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சட்டப்பேரவை துணைத் தலைவர் திரு. எஸ். திருநாவுக்கரசு தெரிவித்தார்.

இலங்கை இந்திய ஒப்பந்தம் முழுமையாக நிறைவேற்றப்படவேண்டும் என்ற பிரதமர் திரு. ராஜீவ் காந்தியின் கொள்கையை அ. தி. மு. க. ஆதரிக்கிறது என்றும் திரு. திருநாவுக்கரசு சென்னையில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

## ஜனாதிபதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கோளை விடுத்துள்ளார்.

அமைதிப் படை விவகாரத்தைப் பிரத்தியேகக் கண்ணோட்டத்துடன் அணுகவேண்டும் என்றும் கூறிய அமைச்சர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;-

''அமைதிப்படை விவகாரத்தில் சிறுமான்மைத் தமிழ் மக்களின் கருத்தை புறக்கணிக்க முடியாது.

''தீவிரவாதிகளுடன் பேச்சு நடத்த முடியாது என்று முன்னாள் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா தீர்மானித்திருந்தார். அதே கருத்தையே நானும் ஆதரிக்கிறேன்.

''அமைதிப்படை வெளியேறினால் இலங்கைத்தமிழர்களுக்கு ஆபத்து நேரிடும் என்று திரு. அமிர்தலிங்கம் தெரிவித்த கருத்தை நிராகரிக்க முடியாது''

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org